**செய்தி வெளியீடு எண்: 330** **நாள்: 10.06.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

சவூதி அரேபிய நாட்டில் ரியாதிலுள்ள முன்னணி மருத்துவமனைக்கு இரண்டு வருட பணி அனுபவம் பெற்ற 35 வயதிற்க்குட்பட்ட டிப்ளோமா / பி.எஸ்.சி தேர்ச்சி பெற்ற பெண் செவிலியர்கள் (General Nurses, ICCU, Operating Room) மற்றும் ருஊழு டெக்னிசியன்கள் தேவைப்படுகிறார்கள்

தேர்ந்தெடுக்கப்படும் செவிலியர்களுக்கு ரூ50,000/– முதல் 60,000/– வரை அனுபவத்திற்கேற்றவாறு மாத ஊதியம், டெக்னிசியன்களுக்கு ரூ55,000/– வரை மாத ஊதியம், இலவச விமான டிக்கெட், உணவுப்படி, இருப்பிடம், விசா, மருத்துவச் சலுகை, மற்றும் சவூதி அரேபிய நாட்டின் சட்டத்திட்டத்திற்க்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ளவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், பாஸ்போர்ட் மற்றும் ஆதார் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் **ovemclsn@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 16.06.2019க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணிவிவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளமான **www.omcmanpower.com** மற்றும் 044– 22505886/22500417/8220634389 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு நிறுவனத்தின் முகவர் எண். **Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84** ஆகும்.

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**